# மார்ச் – 09 – சனி

## "ஆண்டவரே! எனக்குச் செவி சாய்த்துப் பதிலளியும்" – திபா 86:1

**முதல் வாசகம் ஏசாயா : 58 : 9 – 14**

ஆண்டவர் கூறுவது, உன்னிடையே இருக்கும் நுகத்தை அகற்றிவிட்டு, சுட்டிக்காட்டிக் குற்றஞ்சாட்டுவதையும் பொல்லாதன பேசுவதையும் நிறுத்திவிட்டு,பசித்திருப்போருக்காக உன்னையே கையளித்து, வறியோரின் தேவையை நிறைவு செய்வாயானால், இருள் நடுவே உன் ஒளி உதிக்கும் இருண்ட உன் நிலை நண்பகல் போல் ஆகும்.ஆண்டவர் தொடர்ந்து உன்னை வழிநடத்துவார் வறண்ட சூழலில் உனக்கு நிறைவளிப்பார் உன் எலும்புகளை வலிமையாக்குவார் நீயும் நீர் பாய்ந்த தோட்டம்போலும், ஒருபோதும் வற்றாத நீரூற்றுபோலும் இருப்பாய்.உன் மக்கள் பண்டை நாளிலிருந்து பாழடைந்து கிடப்பவற்றைக் கட்டியெழுப்புவர் தலைமுறை தலைமுறையாக உள்ள அடித்தளங்களின் மேல் கட்டியெழுப்புவாய் தகர்ந்த மதிலைத் திரும்பக் கட்டுபவன் என்றும் குடியிருப்பதற்குத் தெருக்களைச் சீர்படுத்துபவன் என்றும் பெயர் பெறுவாய்.ஓய்வுநாளின் முறைமைகளினின்று விலகிச் செல்லாது, என் புனித நாளில் உன் விருப்பம் போல் செய்யாதிருந்து, ஓய்வு நாள் "மகிழ்ச்சியின் நாள்" என்றும் "ஆண்டவரின் மேன்மைமிகு புனித நாள்" எனவும் சொல்லி அதற்கு மதிப்புத் தந்து, உன் சொந்த வழிகளில் செல்லவோ உன் சொந்த ஆதாயத்தை நாடவோ வெற்றுப் பேச்சுகளைப் பேசவோ செய்யாதிருந்தால்,அப்பொழுது, ஆண்டவருக்கு ஊழியம் புரியும் மகிழ்ச்சியைப் பெறுவாய் நானோ, மண்ணுலகின் உயர்விடங்களில் உன்னை வலம்வரச் செய்வேன் உன் மூதாதையாகிய யாக்கோபின் உரிமைச் சொத்தின் மூலம் உனக்கு உணவளிப்பேன் ஆண்டவரின் வாய் இதை உரைத்தது.

**பதில்பாடல் :** ஆண்டவரே உமது வழியை எனக்குக் கற்பியும்

**நற்செய்தி : லூக்கா 5 : 27 – 32**

அக்காலத்தில் இயேசு சுங்கச் சாவடியில் அமர்ந்திருந்த லேவி என்னும் பெயருடைய வரி தண்டுபவர் ஒருவரைக் கண்டார் அவரிடம், "என்னைப் பின்பற்றி வா!" என்றார். அவர் அனைத்தையும் விட்டுவிட்டு எழுந்து இயேசுவைப் பின்பற்றிச் சென்றார். இந்த லேவி தம் வீட்டில் அவருக்கு ஒரு பெரியவிருந்து அளித்தார். வரி தண்டுபவர்களும் மற்றவர்களும் பெருந்திரளாய் அவர்களோடு பந்தியில் அமர்ந்தார்கள். பரிசேயர்களும் அவர்களைச் சேர்ந்த மறைநூல் அறிஞர்களும் முணுமுணுத்து இயேசுவின் சீடரிடம், "வரிதண்டுபவர்களோடும் பாவிகளோடும் சேர்ந்து நீங்கள் உண்பதும் குடிப்பதும் ஏன்?" என்று கேட்டனர். இயேசு அவர்களுக்கு மறுமொழியாக, "நோயற்றவர்க்கு அல்ல, நோயுற்றவர்க்கே மருத்துவர் தேவை. நேர்மையாளர்களை அல்ல, பாவிகளையே மனம் மாற அழைக்க வந்தேன்" என்றார்.

**தியானம்:** "நேர்மையாளர்களை அல்ல பாவிகளையே மனம்மாற அழைக்கவந்தேன்" (லூக்5:32) என்ற ஆண்டவர் இயேசு 2019ம் வருட தவக்காலத்தில் எமது வாழ்வில் நமக்கு மதிப்பு கௌரவம் கிடைக்குமென விரும்பிப் பற்றிப் பிடித்துக்கொண்டிருப்பவற்றை இறையரசைப் பரப்புதலுக்காக விட்டுக்கொடுத்தல் என்பன தொடர்பாக சிந்தித்து மனம்மாறி வாழ (லூக்கா 5:27-32) அழைப்பு விடுக்கின்றார். லேவி என்றழைக்கப்படும் மத்தேயு "என்னைப் பின்பற்றி வா" (லூக்கா 5:27) என ஆண்டவர் இயேசுவின் அழைப்பின் குரல் கேட்டுப் பின்தொடர்ந்தது போன்று நாங்களும் இவ்வுலக சுக செல்வங்கள், பட்டம், பதவிகள் அனைத்தையும் இழந்து அல்லது துறந்து ஆண்டவர் இயேசுவின் திருப்பாதத்தினைப் பின்தொடர அழைக்கப்பட்டுள்ளோம். அவ்வாறான அழைப்பு பாவி லேவியின் வாழ்வில் எவ்வளவு பெரிய மாற்றத்தையும், அதிசயத்தையும் ஏற்படுத்தியதென நற்செய்தி விபரிக்கின்றது. வரிதண்டுபவராக வசதியோடு வாழ்ந்தவர் பெரும் செல்வமும், வசதி வாய்ப்புக்களும், வருமானமும் தரக்கூடிய வாழ்வை இழந்து ஆண்டவர் இயேசுவின் பின்னே செல்வதனை ஒருபாக்கியமாகக் கருதுகின்றார். விருந்து கொண்டாடி தனக்கும், இறைமகனுக்கும் இடையிலான உறவின் நெருக்கத்தை இன்னும் அதிகமாக்குகின்றார். மக்களது பார்வையில் பாவி எனக்கருதப்பட்டவர் ஆண்டவர் இயேசுவின் பார்வையில் வேறுவிதமாக அதாவது நண்பராக - திருச்சீடராக - நற்செய்தியாளராக மட்டுமல்ல, புனிதராகவும் உயர்த்தப்பட்டார். ஆண்டவர் இயேசுவின் காலத்தில் வாழ்ந்த மக்கள் போன்று இன்று 2019ம் வருடத்திலும் நாம் இவ்வுலகத்தின் கவர்ச்சி வட்டத்திற்குள் உள்வாங்கப்பட்டு வாழவில்லையா? நற்செய்தியில் லேவி போன்று இவ்வுலக செல்வம் அனைத்தையும் இழந்தாகினும் நமது வாழ்வின் நிலையான செல்வத்தை அடைவது மட்டுமல்ல, ஆண்டவர் இயேசு வழங்கும் நிறைவாழ்வில் பங்காளிகளாவோம். எமது மனமாற்றத்திற்காக காவலிருக்கும் அவரண்டை நாம் நெருங்கி வரவேண்டுமென அனுதினமும் அழைப்பு விடுக்கிறார். ஆதலால் "ஆண்டவரே! எனக்குச் செவி சாய்த்துப்பதிலளியும்" (திருப்பாடல் 86:1) என்ற அழைப்போடு நாம் மாற்றமடைந்து எம்மிடமுள்ள சதுசேய பரிசேயத்தனங்களை இத்தவக்காலத்தோடு தூக்கியெறிவோம். நறுமணம் வீசும் செந்தாமரைகள் நாற்றமடிக்கும் சேற்றில்தான் உருவாகின்றன என்ற உண்மையை உணர்ந்து ஏற்றுக்கொள்வோம்.